(ஐ) தாம்பரம் மார்க்கெட் பகுதி, போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் பதில் சொல்ல முடியாது. அதற்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் அமைச்சரிடம் ஏற்கெனவே பேசியிருந்தால் நான் என்ன செய்யமுடியும்? அமைச்சர் பதில் சொல்வார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்படியெல்லாம் பேசுவது முறையல்ல. பேரவைத் தலைவர் என்று ஒருவர் எதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மார்க்கெட் பகுதி என்பது* Highways, Railway line *மற்றும் மார்க்கெட் பகுதியை ஒட்டியிருக்கின்ற மிகப் பெரிய வியாபார ஸ்தலம். போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. அதற்கு முக்கியக் காரணம் நடைபாதைக் கடைகள், ஆட்டோக்கள் மட்டுமல்ல. சென்னையை ஒட்டியிருக்கின்ற. . .*

(ஒ) மன்னார்குடி தொகுதி, முக்குளம் சாத்தனூர், பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, சொல்லுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலின் கோரத் தாண்டவத்தால் சிக்கித் தவிக்கும் எங்கள் மன்னார்குடியில் பல இடங்களில் பட்டா கிடைக்காமல் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். குறிப்பாக முக்குளம் சாத்தனூர் பகுதியில் 300 ஏக்கருக்கு மேலாக பட்டா வழங்கப்படாததால் அரசு கொடுக்கும் நிவாரணம் எதுவும் கிடைப்பதில்லை. குறிப்பாக. . .*

(ஏ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரம், மேம்பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள், அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*